தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1981 பிப்ரவரி 9

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

ஒருவருடைய உள்ளம் தூய்மையாக இருத்தல் அவர் செய்யும் செயல் தூய்மையாக இருத்தல் ஆகிய இரண்டும் அவர் மேற்கொண்டுள்ள பண்பாட்டின் தூய்மை காரணமாகவே அமையும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கள்ளக்குறிச்சி வட்ட அலுவலகக் கட்டிடம்.

*வினா எண். 241—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் கட்டிடம் கட்ட 1971 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

(இ) கட்டிடம் கட்டும் வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ), (ஆ), & (இ) கட்டிடம் கட்ட ஆணை பிறப்பிக்கப்படவில்லை.

[1981 பிப்ரவரி 9

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு உத்தேசிக்கப்பட்டதாக எனக்குத் தகவல் கிடைத்தது. ஆகவேதான் இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். அப்படி இல்லையென்றால், எப்பொழுது கட்டிடம் கட்ட உத்தேசம் உள்ளது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை வட்டாட்சி அலுவலகம், மாவட்ட ஆட்சி அலுவலகம், கோட்ட வளர்ச்சி அலுவலகம் ஆகியவை கட்டுவதற்காக முன்னால் எதை எடுத்துக் கொள்வது, பின்னால் எதை எடுத்துக் கொள்வது என்று முறைப்படுத்தி எடுத்துக்கொள்ளப்படுகிறது. அது வரும் ஆண்டில் யோசிக்கப்படும். இதற்கு முன்னால், அதைக் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

சித்த மருந்துகள் மீதான விற்பனை வரி.

*வினா எண். 242—திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) சித்த மருந்து உற்பத்தி செய்பவருக்கு விற்பனை வரி 8 சதவீதம் போட்டிருப்பதைக் குறைக்க அரசிடம் ஆலோசனை ஏதாகிலும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய பழம் பெரும் வைத்திய முறையிலே, சித்த வைத்தியம் பண்டைய காலத்திலிருந்து நடந்து வருகிற தொழிலாகும். அதே நேரத்திலே, கை முறையிலே செய்கின்ற தொழில். பட்டை வேர் போன்ற நாட்டுப் பொருள்களை வைத்துக் கொண்டு செய்கிறார்கள். கையினாலே செய்யப்படுகின்ற இதர சிறு தொழில் பொருட்களுக்கு வரி விலக்கு அளிப்பது போல் இதற்கும் வரி விலக்கு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.